APRIL/MAY 2024

FATA43/BATA43/CATA43 — தமிழ் இலக்கிய வரலாறு – 2

Time : Three hours Maximum : 75 marks

LIBRARY

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. பாம்பாட்டி சித்தர் பற்றிக் கூறுக.

2. வேற்றரசர் ஆட்சியில், அரசாங்க மொழியாக எம்மொழி அமைந்திருந்தது?

3. வண்ணக் களஞ்சியப் புலவர் இயற்றிய நூல் ஒன்றினைக் குறிப்பிடுக.

4. தமிழ்ப் புதுக் கவிதை மன்னன் யார்?

5. இராபர்ட்-டி-நொபிலியின் தமிழ்ப்பணி இரண்டினைக் குறிப்பிடுக.

6. கிறித்துவக் காப்பியங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

7. மகாகவியின் முப்பெரும் படைப்புகள் யாவை?

8. ரெ. கார்த்திகேசு எத்தகைய படைப்பாளர்?

9. இணைய இதழ்கள் இரண்டினைக் கூறுக.

10. சாகித்ய அகாடமி விருது பெற்ற சிற்பியின் படைப்பைக் கூறுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) வளி, அழல், ஐயம் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழகத்தில் வேற்றரசர்கள் ஆட்சியில் தமிழ் மக்களின் நிலை குறித்து எழுதுக.

12. (அ) இசுலாமியர் படைத்த இலக்கிய வகைகள் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) கிறித்துவர்கள் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு ஆற்றியுள்ள பங்களிப்பை விளக்குக.

13. (அ) எல்லீசர் பதித்த தமிழ் நூல்கள் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) வீரமாமுனிவரின் எழுத்துச் சீர்திருத்தம் குறித்து விளக்கிக் கூறுக.

14. (அ) வாணிதாசனின் படைப்புகள் கொண்டு அவரது சமுதாயச் சீர்திருத்த சிந்தனை விளக்கிக் கூறுக.

(அல்லது)

(ஆ) கனடா புலம்பெயர் படைப்பாளர்களின் இலக்கியப் பங்களிப்பைப் புலப்படுத்துக.

15. (அ) வலைத்தளங்கள் பற்றி விளக்கிக் கூறுக.

(அல்லது)

(ஆ) கவிதைப் படைப்பிற்காகச் சாகித்ய அகாடமி விருது பெற்ற நூலின் சிறப்பை எடுத்தியம்புக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.

16. சித்தர்கள் குறித்துக் கட்டுரை வரைக.

17. தமிழக இசுலாமிய மெய்ஞ்ஞானிகள் கைக்கொண்ட யோகநிலையை விளக்கி வரைக.

18. கு. அழகிரிசாமி சிறுகதையின் போக்கை விவரித்தெழுதுக.

19. முக நூலின் நன்மை தீமைகளை எடுத்தியம்புக.

20. சாகித்ய அகாடமி விருது பெற்ற தமிழ்ப் படைப்புகளின் சிறப்பை இயம்பிடுக.

———————